விட்டிருக்கிருர். ஆகவே, அந்த உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கமும் மேல் நடவடிக்கை எடுக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

பொள்ளாச்சி அரசினர் மருத்துவமனை

*190 வினு—**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகராட்சி மன்றம் பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனைக் கட்டட நிதிக்கு நன்கொடையாக ரூபாய் ஒரு லட்சம் கொடுப்பதற்கு அரசிடம் அனுமதி கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம். 18—11—1971-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2552-ல் அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் ஆராய்ச்சி

* 191 வினு—**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழ் மாநாட்டின் வருவாயிலிருந்து திருக்குறள் ஆய்வுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்விதம் பயன்படுத்தப்படுகிறது ?

(இ) அதிலிருந்து தனி நபருக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறதா ?

(உ) ஆம் எனின், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) நமது மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும், மூன்று லட்ச ரூபாயைப் பயன்படுத்தித் தகுதி பெற்ற விரிவுரையாளர்களை நியமித்து ஆராய்ச்சி நடத்தி வருகின்றது.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

Sacred Hearts School at Palayamkottai

* 192 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether Sacred Hearts School, Palayamkottai, is exempted from general guidelines for selection of candidates for training; and

(b) if so, the reasons therefor?